பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 05 வியாழக்கிழமை 19.06.2025 கதிர் 222

**இனி இது ரகசியம் அல்ல!**

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தோல் வியடைந்ததைத் தொடர்ந்து, அக்கட்சிக்குள் கடுமையான பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் ☞ 2

## தமிழ் அரசுக் கட்சி முடிவை மீறிய உறுப்பினர் உடன் இடைநிறுத்தம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் இராஜேந்திரம் கட்சியின் தீர்மானத்தை மீறி வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தமை தொடர்பில் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவரது நடவடிக்கைக்கு விளக்கம் அளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளார்.

ஒரு வார காலத்திற்குள் விளக்கம் அளிக்க வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் அவர் கட்சி உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்படுவார் என்றும் கட்சியின் பொது செயலாளர் சுமந்திரனால் நேற்று உடனடியாகவே சூட்டோடு சூடு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

வலி. வடக்குபிரதேசசபையில்தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சுகிர்தன் வெற்றி பெற்றார். எனினும் கட்சி உறுப்பினரான இராசேந்திரம் தான் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது நடுநிலை வகிக்கின்றார் என்று பகிரங்கமாக அறிவித்தார்.

சபைகளில் தவிசாளர்களாக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கட்சித் தலைமை எடுக்கும் முடிவுக்கு அமைய அந்த நபருக்கு ☞ 6

## பிணை கிடைத்துவிட்டபோதும் கெஹலிய குடும்பம் சிறையில்

நேற்றுக் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் நிறுத்திப் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதன் காரணத்தால் விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டனர். பிணை நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னர் இன்று அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட இந்த மூன்று பேரும் கொழும்பு ☞ 6

# தமிழ் அரசுக்குள்ளே இருக்கும் கறுப்பாடுகள் மீது நடவடிக்கை

### கட்சித் தலைவர் சிவஞானம் அறிவிப்பு



தமிழ் அரசுக் கட்சிக்குள் இருக்கும் கறுப்பாடுகள் மீது தயவுதாட்சண்யம் அற்ற ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்தார்.

வலி. கிழக்கு பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஏனைய கட்சிகள் அனைத்திலும் பார்க்க அதிக ஆசனங்கள் கிடைத்திருந்த போதும் அங்கு கட்சி தோற்கடிக்கப்பட்டிருப்பது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பியபோது இதனைத் தெரிவித்தார்.

வலி. வடக்குப் பிரதேச சபையில் ☞ 2

## ஈரான் - இஸ்ரேல் போர் குறித்த விவாதம் நேற்று ஒத்திவைப்பு

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெறவிருந்த ஈரான் - இஸ்ரேல் போர் தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதம் இன்றுவரை பிற்போடப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 05.30 வரை நடைபெற விருந்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்று காலை 09.30 வரை ஒத்திவைக்கப்பட்டன. எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இஸ்ரேல் - ஈரான் மோதல் தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற இருந்த நிலையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா இந்த விவாதத்திற்கான முன்மொழிவைச் சமர்ப்பித்திருந்தார். எனினும் அந்த முன்மொழிவு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள தயாராகவிருந்த சந்தர்ப்பத்தில் அவர் சபையில் இருக்கவில்லை.

அதன் காரணமாக பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியினால் நாடாளுமன்ற அமர்வை இன்று வரை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. விபத்து ஒன்றில் சிக்கிக் கொண்டதன் காரணமாகத் தன்னால் நேரத்திற்கு நாடாளுமன்றத்திற்கு வரமுடியாமல் போனதாகப் பின்னர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

## தமிழ் அரசின் கோட்பாட்டோடு காங்கிரஸ், டிரிஎன்ஏ இணங்கி வராத காரணத்தால் எல்லாச் சபைகளிலும் போட்டிபோடுகின்றோம்

### சுமந்திரன் தெளிவான விளக்கம்

தமிழ் அரசுக் கட்சி முன்வைத்த, சபைகளில் அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைப்பதற்கு மற்றவர்கள் ஆதரவு தரவேண்டும் என்ற கோட்பாட்டோடு அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் (டிரிஎன்ஏ) இணங்கி வராமல், தாங்கள் இரு தரப்பும் சேர்ந்த ஓர் அணி என்று ஒரு பொய்யான எண்ணிக்கையைக் காட்டுகின்ற காரணத்தாலே நாங்கள் அனைத்துச் சபைகளிலும் போட்டிபோடுகின்றோம் என்று தெரிவித்தார் அந்தக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

மன்னாரில் நேற்று பகல் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த ☞ 2

## சித்திரவதைக்குள்ளான இளைஞனுக்கு ரூ. 20 லட்சம் இழப்பீடு செலுத்தத் தீர்ப்பு

### இரு பொலிஸ் அதிகாரிகளின் தனிப்பட்ட நிதியிலிருந்து

ஓர் இளைஞனை சித்திரவதை செய்து அவனது அடிப்படை உரிமைகளை மீறிய இரு பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்டவருக்கு தலா 10 லட்சம் ரூபா இழப்பீட்டைத் தங்கள் தனிப்பட்ட நிதியிலிருந்து வழங்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு தங்கத் திருட்டு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட மதுஷன் என்ற இளைஞனைக் கைது செய்து சித்திரவதை செய்தது தொடர்பாக இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மதுஷன் ஒரு வழக்கறிஞருடன் தானாக முன்வந்து ☞ 6

## நியூஸி குடியேற்ற விதிகளில் தளர்வு

நியூஸிலாந்தில் தொழிற்தகுதி அடிப்படையில் குடியேறுவதற்கான விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திறமையான குடியேற்றத்தை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாக, நியூசிலாந்து ஜூன் 23, 2025 முதல் முறையான மதிப்பீட்டுசெயல்முறையிலிருந்து இலங்கை உட்பட ஒன்பது நாடுகளின் தகுதிகளுக்கு விலக்கு அளித்துள்ளது.

மதிப்பீட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட ☞ 2

## 53 நாடுகளின் தீர்ப்புகள் இனி இலங்கையில் செல்லுபடியாகும்

வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தீர்ப்புகள் மற்றும் கடன் வழங்கல் மற்றும் பெறுதல் பிணக்கு தொடர்பான தீர்ப்புகளை இலங்கையில் அங்கீகரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இச்சட்டத்தில் 53 நாடுகளில் வழங்கப்படும் தீர்ப்புகள் இலங்கையில் செல்லுபடியாகும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு தீர்ப்புக்களை பரஸ்பரம் ஏற்று அங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுத் தீர்ப்புக்களை பரஸ்பரமாக ஏற்றுக்கொள்ளுதல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் தொடர்பான சட்டம் இதுவரை காலமும் இருக்கவில்லை. இவ்வாறான நிலையில் 2024 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க வெளிநாட்டு தீர்ப்புக்களை பரஸ்பரம் அங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் தொடர்பான சட்டம் இயற்றப்பட்டது. இருப்பினும் இந்த சட்டம் முறையாக செயற்படுத்துவதற்குரிய கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவில்லை.

எந்தெந்த நாடுகளில் வழங்கப்படும் தீர்ப்புகளை ஏற்று அங்கீகரித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டு புதிய ☞ 2

## கடமைகளை பொறுப்பேற்றனர்

வவுனியா மாநகர முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோர் நேற்றுக் காலை கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றனர்.

வவுனியா மாநகர சபையின் முதல்வர், துணை முதல்வர் தெரிவு அண்மையில் இடம்பெற்றிருந்தது. முதல்வராக காண்டீபனும் துணை முதல்வராக கார்த்தீபனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் உத்தியோக பூர்வமாக தமது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றனர். இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள் பொதுமக்கள், மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்

(100)

## காரைநகரில் ஆட்சியைப் பிடிப்பதற்கு காங்கிரஸ், மான், சுயேச்சை ஒப்பந்தம்

யாழ்ப்பாணம் காரைநகர்ப் பிரதேச சபையில் ஆட்சியைப் பிடிப்பதற்காகத் தமிழ் மக்கள் கூட்டணி (மான்) மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (சைக்கிள் ) ஆகியன ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. சுயேச்சைக் குழுவுடன் சேர்ந்து இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. காரைநகர்ப் பிரதேச சபைக்கான தவிசாளர் தேர்வு இன்று இடம்பெறவுள்ளது.

காரைநகர் பிரதேசசபையில் உள்ள 11 உறுப்பினர்களில் தமிழ் மக்கள் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தே.ம.சக்தி மற்றும் ஐக்கிய தேசிய ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வருகின்றன.

கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை எளிதாகப் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தபோதும், அது இழக்கப்பட்டதற்காக, கட்சியின் தலைமை மீது பழி போடப்பட்டு கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. கட்சிக்குள் உள்ள பலமான ஆர்வலர்களும் தலைவர்களும் சஜித் பிரேமதாசவை இந்த விடயத்தில் சகட்டுமேனிக்கு விமர்சித்து வருகின்றனர் என்று கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்காகக் கடைசி நேரத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் வெளிநாடு சென்றது பல ஆர்வலர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவும்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அதிகபட்ச அர்ப்பணிப்பைக் காட்டத் தவறியதே தோல்விக்குக் காரணம் என்றும் பல ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதுபோன்றதொரு விமர்சனத்தை தமிழ் அரசுக் கட்சியின் தலைமையும் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. யாழ்ப்பாணத்தில் உள்ள 17 சபைகளிலும் ஆட்சியமைப்போம் என்று வீராவேச உரையை ஆற்றியிருந்தாலும், அதற்குரிய சூட்சுமங்களையும் குழிபறிப்பு அரசியலையும் தமிழ் அரசுக் கட்சித் தலைமை கைக்கொள்ளவில்லை என்பது ஆட்சியமைப்பின்போது மிகத் தெளிவாகவே தெரிந்தது. மற்றைய தரப்பிலிருந்து ஆட்களை உருவிக்கொள்ளும் சூட்சுமம் தமிழ் அரசின் தலைவர்களுக்குக் கைவரவில்லை. அல்லது அது தெரிந்தவர்களுக்குத் தமிழ் அரசின் தலைமை கைவரவில்லை என்பது சாவகச்சேரி நகர சபையிலும், வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையிலும் வல்வெட்டித்துறை நகர சபையிலும் வலி. வடக்கு பிரதேச சபையிலும் மிக நன்றாகவே தெரிந்தது.

தமிழ் அரசுக் கட்சி வெளிப்படையாகவே ஈ.பி.டி.பியின் ஆதரவைக் கோரியிருந்தது. அந்த ஆதரவை ஈ.பி.டி.பியும் வழங்கியிருந்தது. அதுபோன்றே மான் கட்சியுடனும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருந்தது. அவர்களும் சபைகளில் தமிழ் அரசுக் கட்சியை ஆதரித்தார்கள். இந்த வெளிப்படையான கொடுக்கல் வாங்கல் தவிர வேறு எந்தவொரு அரசியல் 'டீல்'களையும் சூதுவாதுக்களையும் தமிழ் அரசுக் கட்சியால் அரங்கேற்றியிருக்க முடியவில்லை. ஆனால், தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான தமிழ் காங்கிரஸ் (சைக்கிள் கூட்டு) அவையெல்லாவற்றையும் கனகச்சிதமாக அரங்கேற்றியது. தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்தும் தனது குறியில் அது மிகத் திறமையாக அரசியல் சதிகளில் ஈடுபட்டது. அதனால்தான் பல சபைகளிலும் அது இரகசிய வாக்கெடுப்புக் கோரியது. ஆனால் அந்தக் கலை தமிழ் அரசின் தலைமைக்குக் கைவரவில்லை, அல்லது அதனைக் கைக்கொள்ள இந்தத் தருணத்தில் அது தயாராயிருக்கவில்லை. அப்படியிருக்கும்போது யாழ்ப்பாணத்தில் 17 சபைகளையும் கைப்பற்றுவோம் என்று சவால் விட்டதெல்லாம் 'டுமச்' தான்.

தமிழ் அரசுக் கட்சி சதி அரசியலில் ஈடுபடாததன் விளைவு ஏற்படியானதாக அமைந்தது என்றால், பல சபைகளில் தமிழ் அரசின் தலைதப்பியதே பெரும் புண்ணியம் என்கிற அளவிற்கு ஆகிவிட்டது. ஆனால், தமிழ் அரசிற்குள்ளேயே சதி அரசியலில் ஈடுபடுவர்களின் கைவரிசையினால் சில சபைகளை அது இழக்கத் தொடங்கியிருக்கிறது. அதில் முதலாவது கோப்பாய் (வலி. கிழக்கு) பிரதேச சபை.

இந்தச் சபையில் நேற்று தமிழ் அரசை வீழ்த்த அந்தக் கட்சிக்குள்ளேயே இருந்த இருவர் துணைபோயிருக்கின்றனர் என்கிற பலத்த சந்தேகம் நிலவுகின்றது. இங்கு ஏற்கனவே சாதியப் பிரச்சினை காணப்பட்டது. ஒரு சாதியினர் தமக்கே தவிசாளர் பதவி தரப்படவேண்டும் என்று அடம்பிடித்தனர். ஆனால், அவர்களால் நிறுத்தப்பட்டவர் வயதில் குறைந்தவராகவும் அரசியல் அனுபவம் குறைந்தவராகவும் இருந்த காரணத்தால் கட்சித் தலைமை, மூத்தவரும் அனுபவமானவருமான ஒருவரை தவிசாளர் தெரிவிற்கு முன்னிறுத்தியது. இதனால் ஏற்பட்டிருந்த மனக் கசப்புக்களை கனகச்சிதமாகப் பயன்படுத்திக்கொண்ட சதி அரசியல்காரர்கள், அவர்களில் இருவரை சங்கு - சைக்கிள் கூட்டுக்கு ஆதரவாக வாக்களிக்கப்பண்ணி அந்தத் தரப்பினரை வெற்றிபெறச் செய்துவிட்டார்கள்.

இந்தச் சபையில் தமிழ் அரசை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட ஈ.பி.டி.பி மற்றும் மான் கட்சியினர் சதி செய்துவிட்டார்கள் அல்லது கைகழுவிவிட்டார்கள் என்று முதலில் தகவல்கள் வந்தாலும் அப்படி நடக்கவில்லை என்று உறுதிப்படுத்த முடிந்தது. கடைசியில் தங்களில் இப்படி வந்து முடியும் என்று அறிந்திருந்த காரணத்தால் அவர்களில் சிலர் தாம் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதை தமது அலைபேசியில் படமும் எடுத்து வந்து கட்சித் தலைமைகளுக்கு உறுதிப்படுத்தியிருக்கிறார்கள் என்று கேள்வி. அதுபோக, தங்கள் கட்சிக்குள்ளேயே கறுப்பாடுகள் இருக்கின்றன என்றே தமிழ் அரசுக் கட்சியும் நம்புகின்றது.

நான் ஏற்கனவே தீவகம் மற்றும் கோப்பாயில் இந்தச் சதி நடக்கிறது என்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். தமிழ் அரசுக் கட்சி வீழ்ந்தாலும் பரவாயில்லை, தமது அரசியல் வாழ்ந்தால் போதும் என்று கட்சிக்குள் அரசியல் செய்பவர்களின் சதியாலு-ம் மற்றைய கட்சிகளின் சதியாலும் கோப்பாயில் தமிழ் அரசு வீழ்த்தப்பட்டுள்ளது. சதி அரசியலை இனிப் பழகக்கூடிய வல்லமையும் வயதும் தமிழ் அரசுத் தலைமைக்கு இல்லை என்பதால், நடப்பதைப் பார்த்திருப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்றே எனக்குப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசுக்குள்ளே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வலி. வடக்கிலும் தமது உறுப்பினர் ஒருவர் கட்சித் தலைமையின் முடிவை மீறி வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தார். அவரைக் கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தும்படி செயலாளருக்குத் தான் தெரிவித்திருக்கிறார் என்றும் கூறினார். அதேபோன்று வலி. கிழக்கில் கட்சிக்கு எதிராகச் சதி செய்த கறுப்பாடுகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அது என்னவென்று நாம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அரசியலில் சில சதிகள் நடப்பது வழமைதானே. அது நடந்திருக்கிறது. அதனை வெளிப்படையாக அறிந்து பிடிக்க முடியவில்லை இப்போது. ஆனால் ஆராய்ந்து அதனைக் கண்டுபிடிப்போம், பிடிபடும். அதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போது வலி. வடக்கு பிரதேச சபையில் கட்சித் தலைமையின் முடிவுக்கு எதிராகத் தான் நடுநிலை என்று அறிவித்தவர் மீது எப்படி நடவடிக்கை எடுக்கின்றோமோ அதேபோன்று வலி. கிழக்கில் எமது கட்சிக்குள் உள்ள கறுப்பாடுகள் மீதும் இதே நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## தமிழ் அரசின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எந்தச் சபைகளில் அதிகூடிய ஆசனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதோ, அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என நாங்கள் கூறி இருந்தோம். இதனை ஒரு கோட்பாடாக நாங்கள் கூறி இருந்தோம்.

இத்தேர்தலில் மட்டுமல்ல, இதற்கு முன் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் கூறியிருந்தோம்.

பல கட்சிகள் இந்த கோட்பாட்டை ஏற்றுக்கொண்டனர். எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் உள்ளதோ அந்த கட்சி ஆட்சி அமைக்க ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோட்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவ்வாறு பார்க்கின்றபோது வடக்கு, கிழக்கில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு 35 சபைகளில் அதிகூடிய ஆசனங்கள் இருக்கின்றன. அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைத்திருக்கவேண்டும்.

இந்தக் கோட்பாட்டிற்கு இணங்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலே செயற்பட்டிருக்கவேண்டும். ஆனால், தமிழ் அரசுக்கு 35 சபைகளும் தமக்கு ஒன்றிரண்டு சபைகளும்தான் கிடைக்கும் என்பதைக் கண்டறிந்தவுடனே தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் கொள்கை உடன்பாடு என்ற ஒன்றுக்கு வருவதாகச் சொல்லிக்கொண்டு, தங்களை ஒரு கட்சியாகக் கணிக்கவேண்டும் என்று இப்போது கூறுகின்றார்கள். அது முறையற்ற ஒரு செயற்பாடு. இப்படி நான்கைந்து கட்சிகள் சேர்ந்து, நாங்கள் ஒரு கட்சி, எங்களுக்குத்தான் பெரும்பான்மை என்பது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் ஒரு செயற்பாடு.

மக்கள் ஆணை வழங்கிவிட்டார்கள். எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்துள்ளதோ அந்த கட்சி ஆட்சி அமைக்க வேண்டும். அதை அவர்களும் ஏற்றிருந்தவர்கள். ஆனால், இப்படிக் குதர்க்கமான செயற்பாட்டில் அவர்கள் இறங்கிய காரணத்தால், நாம் அனைவருக்கும் திரும்பவும் ஒரு கோரிக்கை விடுத்திருந்தோம், எமக்குக் கூடுதலான ஆசனங்கள் கிடைத்துள்ள சபைகளில் ஆட்சியமைப்பதற்கு எவராக இருந்தாலும் எமக்கு ஆதரவளிக்கவேண்டியது அவர்களின் தார்மீகக் கடமை, ஜனநாயகக் கடப்பாடு என்று சொல்லியிருந்தோம்.

அதன்படி பல சபைகளில் நாம் இப்போது நிர்வாகத்தை பெற்றிருக்கின்றோம். எமக்கு அதிகூடிய ஆசனங்கள் இல்லாத சபைகளிலே நாங்கள் அதனைச் செய்ய முடியாமல் போயிருக்கிறது. ஆனால் நாங்கள் போட்டிபோடுகின்றோம். ஏனென்றால், இவர்கள் இணங்கி வராமல் ஒரு பொய்யான எண்ணிக்கையைக் காட்டுகின்ற காரணத்தாலே நாங்கள் அனைத்துச் சபைகளிலும் போட்டிபோடுகின்றோம். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற சபைகளில் எமக்கு அதிக ஆசனங்கள் இல்லை அதனால் நாம் தோற்றிருக்கின்றோம். சாவகச்சேரியில் சமநிலையிருந்தது. அதிர்ஷ்டம் எமது பக்கம் இல்லாததால் அவர்கள் வென்றிருக்கிறார்கள்.

நாங்கள் சொன்ன கோட்பாட்டின் அடிப்படையில் நாங்கள் ஆட்சியமைத்துக் கொண்டிருக்கின்றோம். பல இடங்களில் நாங்கள் சொன்ன கோட்பாட்டிலிருந்து மாறாமல் நாங்கள் அவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றோம். வவுனியா மாநகர சபையிலே அப்படி ஆதரவு வழங்கியிருக்கின்றோம். எமது ஆதரவுடன்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கு ஆட்சியமைத்திருக்கிறது.

ஒரு சில சபைகளில்தான் நாம் ஒரு இணக்கப்பாட்டோடு ஒப்பந்தம் செய்திருக்கின்றோம். உதாரணமாக நல்லூரில் தமிழ் மக்கள் கூட்டணியுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றோம். அதனால் எந்தெந்த சபைகளில் யார் யார் எங்களுக்கு ஆதரவளிப்பார்கள் என்று சொல்லமுடியாது. நல்லூர் மற்றும் திருகோணமலையில் ஒரு சபை தவிர மற்றைய சபைகளில் நாங்கள் கூட்டாட்சியோ, கூட்டணி ஆட்சியோ, சேர்ந்தாட்சியோ செய்யவில்லை.

இது மக்களுக்கு அடிப்படைச் சேவை செய்கின்ற சபைகள், எதற்காக அந்தச் சபைகளுக்குப் போட்டிபோட்டிருக்கின்றோம் என்றால், மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான். உள்ளூராட்சி சபைகளில் மக்களுக்குச் சேவை செய்வதைத் தவிர வேறு கொள்கைகள் இல்லை. அதற்காகத்தான் எல்லாக் கட்சிகளும் போட்டிபோட்டன. நாங்கள் கூடுதலாக மக்களுக்குச் சேவை செய்வோம் என்றுதான் தேர்தலின்போது அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி அடிபட்டுப் போட்டி போட்ட பின்னர் எங்களுக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தால், நாங்கள்தான் ஆட்சியமைக்கவேண்டும். அதுதான் நியாயம், நீதி. நிர்வாகத்தை அமைப்பதில் குளறுபடி செய்து. அதில் குதர்க்கமான நிலைப்பாடு எடுத்து செயற்படுபவர்களோடு எமக்கு எந்தவித உடன்பாடும் கிடையாது. எமது கோட்பாட்டைச் சிலர் ஆதரிக்கிறார்கள் சிலர் ஆதரிக்காமல் இருக்கிறார்கள். அது அவர்களது நிலைப்பாடு - என்றார்.

## காரைநகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி என்பவற்றுடன் சுயேச்சைக் குழு ஆகிய 5 தரப்புகளும் தலா இரண்டு ஆசனங்களைக் கொண்டிருக்கின்றன. தமிழ் அரசுக் கட்சி ஓர் ஆசனத்தை பெற்றுள்ளது.

சபையில் எந்தக் கட்சிக்கும் அதிகூடிய ஆசனங்கள் இல்லாத நிலையில், இங்கு ஆட்சியமைப்பதற்கான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றில் தமிழ் காங்கிரஸும் தமிழ் மக்கள் கூட்டணியும் ஒப்பமிட்டுள்ளன. சுயேச்சைக் குழுவுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இணக்கத்தின் பிரகாரம் காரைநகர் பிரதேச சபையில் நான்கு ஆண்டுகள் பதவிக்காலத்தில் முதல் ஒன்றே கால் வருடத்திற்கு சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த ஒருவர் தவிசாளராகவும் தமிழ் மக்கள் கூட்டணியினைச் சேர்ந்தவர் உதவித் தவிசாளராகவும் பதவி வகிப்பார்.

இரண்டாவது ஒன்றே கால் வருடத்திற்கு தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் தவிசாளராகவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த உறுப்பினர் உதவித் தவிசாளராகவும் பதவி வகிப்பர். காணப்பட்டுள்ளது.

இறுதி 16 மாதங்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் தவிசாளராகவும் சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் உதவித் தவிசாளராகவும் பதவி வகிப்பர்.

இந்த அடிப்படையிலேயே மூன்று தரப்புகளும் ஒப்பந்தம் செய்துள்ளன.

## 53 நாடுகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தற்போது ஆக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் கடன் வழங்குநர் மற்றும் கடன் பெறுநருக்கு இடையிலான பிணக்குகளை தீர்ப்பதற்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தொடர்பான தீர்ப்பினை இந்த நாட்டில் அமுல்படுத்துவதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. நிபந்தனைகளின் அடிப்படையில் இதன் செல்லுபடித்தன்மை ஏற்றுக்கொள்ளப்படும்.

வெளிநாடுகளில் வழங்கப்படும் குற்றவியல் தொடர்பான தீர்ப்புகள் மற்றும் தண்டனைகள் இந்த சட்டத்துக்குச் செல்லுபடியாகாது.

வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தொடர்பான தீர்ப்புகள் மற்றும் கடன் வழங்கல் மற்றும் பெறுதல் தொடர்பான முரண்பாடுகளுக்கான தீர்ப்புகள் மாத்திரமே இந்த சட்டத்துக்கு ஏற்புடையதாக அமையும். இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்களை உள்ளடக்கியவகையில் வர்த்தமானி முன்னர் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களுக்கு அமைவாக நான் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டேன். அதற்கமைவாக இந்த சட்டத்துக்குரிய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். 53 நாடுகளை உள்ளடக்கியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்துக்கு அமைய நாடுகளுக்கு இடையிலான தூதரகங்களின் செயற்பாடுகள் வினைத்திறனாக்கப்படும் என்றார்.

## நியூஸி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகுதிகளின் பட்டியலை (ஸிஞசிபு) அது விரிவுபடுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் உள்ள தகுதிகள் மற்றும் கல்வி வழங்குநர்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், திறமையான புலம்பெயர்ந்தோர் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும்போது அல்லது சிறப்பு பணி விசாக்களைத் தேர்ந்தெடுக்கும்போது இனி சர்வதேச தகுதி மதிப்பீட்டை (ஐஞஆ) பெற வேண்டிய அவசியமில்லை.

பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்ட ஒன்பது நாடுகளில் பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இத்தாலி, சிங்கப்பூர், தென் கொரியா, இலங்கை, சுவீடன் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியன அடங்குகின்றன.

இந்த விலக்கு நியூசிலாந்திற்கு குடிபெயர விரும்பும் திறமையான தொழில்துறை சார்ந்தவர்களுக்கு நேரத்தை மிச்சப்படுத்தும் மற்றும் செலவுகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திறமையான புலம்பெயர்ந்தோர் பிரிவின் கீழ் தகுதிகளுக்கு வழங்கப்படும் புள்ளிகளையும் இது அதிகரிக்கும்.

## தமிழ் அரசுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவளிக்கவேண்டும் என்று ஏற்கனவே கட்சி சபை உறுப்பினர்களுக்குக் கடிதம் அனுப்பியிருந்தது. அதையும் மீறி இராசேந்திரம் தான் நடுநிலை வகிக்கிறார் என்று அறிவித்தார்.

இதையடுத்து அவரை உடனடியாக கட்சியிலிருந்து இடைநிறுத்தும்படி தலைவர் சிவஞானம் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய செயலாளர் சுமந்திரன் இடைநிறுத்தல் மற்றும் விளக்கம் கோரல் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். கட்சியின் தெளிவான

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# கிளீன் சிறீலங்காவின் கீழ் இந்தாண்டு புதிய திட்டங்கள்

’வளமான நாடு - அழகான வாழ்க்கை’ உருவாக்கும் நோக்கில் ஆளும்தரப்பின் முதன்மைத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட ’கிளீன் சிறிலங்கா’ வேலைத்திட்டத்தின் கீழ் 2025 நிதியாண்டில் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அமைச்சுகள் மற்றும் அவற்றின் கீழ் உள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அந்த திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்படி, விசேட தேவையுடைய சமூகத்தினின் பயன்பாட்டை இலகுபடுத்தும் வசதிகளுடன் கூடிய 10 பேருந்துகளை பாணந்துறை, கடவத்தை, அவிசாவளை ஆகிய நகரங்களில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை வரை இயக்கும் வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இங்கு குறிப்பிடப்பட்டது.

இந்த நாட்டில் இதுபோன்ற ஒரு வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுவது இதுவே முதல் தடவை என்பது இதன் சிறப்பம்சமாகும்.

கண்டி நகரை மையமாக கொண்டு மெய்நிகர் நகரமொன்றை (Virtual City) உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதனை ஒரு வருடத்திற்குள் நிறைவு செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது. முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம் தலதா மாளிகை வளாகத்தை உள்ளடக்கி இருப்பதுடன், அதற்கு செலவிடப்படும் தொகை 50 மில்லியன் ரூபாவாகும்.




உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு நாட்டின் அனைத்து இன மக்களின் கலாசார விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையிலான மூன்று நாள் கலாசார நிகழ்வொன்றை கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், இந்த நிகழ்ச்சித் திட்டம் காலி முகத்திடல் உட்பட 16 இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

சுற்றுலாப் பிரதேசங்களில் தரப்படுத்தப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய 500 மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்காக 525 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் இரண்டு முக்கிய கரையோரப் பகுதிகளுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நீலக்கொடி (Blue Flag) சான்றிதழை, இரண்டு வருடங்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கான நிலைபேறான வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

உனவடுன மற்றும் ஹிரிகடுவ கடற்கரைகள் இதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தின் கீழ் 450க்கும் மேற்பட்ட கடற்கரை பாதுகாப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். அவர்களில் 250 பேருக்கு ஏற்கனவே நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 300 மில்லியன் ரூபா செலவில் கழிவு நீர் அகற்றும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், நகர்ப் பகுதிகளில் உள்ள கால்வாய்களில் உள்ள நீரை சுத்தமாக வைத்திருப்பதற்கும் அவற்றை முறையாக பேணவும் இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள சாதாரண கால்வாய் கட்டமைப்பை பேணும் செயற்பாட்டை நிலைபேறான வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் 100 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மகாவலி ஆற்றில் நீர் மாசடைவதைக் குறைக்கும் நோக்கத்துடனான ஒரு முன்னோடித் திட்டம், மகாவலி ஆற்றின் மேல் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. அத்துடன், 500 மில்லியன் ரூபா செலவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரம் கொள்கலன்களை (Compost Dumpbin) வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முதல் கட்டத்தில், 150 மில்லியன் ரூபா பெறுமதியான கொள்கலன்கள் வழங்கப்படுவதோடு, அதுவும் இந்த வருடத்தில் செயல்படுத்தப்படும்.

120 மில்லியன் ரூபா செலவில் வீதிப் பாதுகாப்பிற்கான வேலைத்திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளதுடன், நாளாந்தம் நிகழும் வீதி விபத்துகளை குறைப்பதே இதன் நோக்கமாகும். போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக

நாடளாவிய ரீதியில் பல மாதிரிக் கிராமங்களை அமைப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

’Clean Sri Lanka வேலைத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கும் நோக்கங்களை அமைச்சுகள் மற்றும் நிறுவன மட்டத்தில் அடைவதற்காக இந்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வது குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

’Clean Sri Lanka செயலகத்தின் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜீ.எம்.ஆர்.டீ. அபோன்சு, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ்.பீ.சீ. சுகீஷ்வர ஆகியோருடன் அமைச்சுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயலாளர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 'கிளீன் ஸ்ரீலங்கா' வெள்ளையானையா?

'கிளீன் ஸ்ரீலங்கா' எனும் திட்டம் ஆளும்தரப்பினால் பெரும் அதிரடியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் நோக்கம் இலங்கை நாட்டை சுத்தமாகவும், ஊழலின்றி பரிசுத்தமான நிர்வாகத்துடன் அமைப்பதென்றும், மக்கள் வாழ்க்கையை எளிமையாக்குவதென்றும் விளக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, நகர நகரமாக குப்பைகளை அகற்றும் திட்டங்கள், மின் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கும் போக்குவரத்து மாற்றங்கள், பொது நிர்வாகங்களில் ஊழல் ஒழிப்புத் திட்டங்கள் ஆகியன பரப்புரையாக அறிவிக்கப்பட்டன.

ஆனால், இந்த திட்டம் நடைமுறையில் எவ்வளவு முன்னேறியுள்ளது என்பது இப்போது ஒரு கேள்விக்குறியாகவே மாறியுள்ளது. 'கிளீன்' என்ற வார்த்தை ஒரு பரபரப்பான கோசமாக மட்டுமே இருக்கிறது. அதற்கான செயல்பாடுகள் தரையில் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. நகரங்களின் சுகாதார நிலை மாறவில்லை; குப்பைகளும், கழிவுகளும் யதார்த்தமாக குவிந்து கொண்டிருக்கின்றன. ஊழலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற இலட்சியம், அதற்கேற்ப எந்த நடவடிக்கையாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை. வீதியில் போக்குவரத்துக் காவலர்கள் இலஞ்சம் கேட்பது உள்ளிட்ட எந்த விடயங்களிலும் மாற்றத்தைப் பார்க்க முடியவில்லை. அதுபற்றிய பயம்கூட அரச பணியாளர்கள் மத்தியில் உருவாகவில்லை.

அதற்கும் மேலாக, இந்தத் திட்டம் தற்போது ஒரு 'புதிய கட்டத்தை' எட்டவிருக்கிறது என்று ஆளும்தரப்பினர் அறிவித்திருக்கின்றனர். ஆனால் பழைய கட்டத்தில் எதுவும் சாதிக்கப்படவில்லை என்ற நிலையில், புதிய கட்டம் என்பது வெறும் பேச்சாகவே தெரிகிறது. போக்குவரத்து ஒழுங்குகள், மாசு கட்டுப்பாடு, கழிவு மேலாண்மை, நிர்வாக சீர்திருத்தம் ஆகிய துறைகளில் எவ்விதத்திலும் முன்னேற்றம் தெரியவில்லை.

இதனால், 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் ஒரு உண்மையான சமூக மாற்ற முயற்சி அல்லவோ என்கிற சந்தேகம் தீவிரமாகவே ஏற்படுகின்றது. இதுவொரு அரசியல் கூச்சலாவே நின்றுபோய்விடுமோ என்கிற அச்சம் பரவுகின்றது. கடந்த ஆட்சிக் காலங்களில் அறிமுகமான வெற்றுத் திட்டங்களைப் போலவே, இதுவும் வெறும் விளம்பரம், சோகம் என்றே நம்பவேண்டியுள்ளது. மக்கள் நலனுக்காகவும், நிலைத்த சமூக மாற்றத்துக்காகவும் உண்மையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், 'கிளீன்' என்ற வார்த்தை வெறும் வெற்றுச்சொல்லாகவே தக்கியிருக்கப்போகிறது.

இந்தநாடு உண்மையில் சுத்தமாகவேண்டுமெனில், முதலில் அதன் நிர்வாகமும் அரசியலும் சுத்தமாக வேண்டும். இல்லையெனில், 'கிளீன் ஸ்ரீலங்கா' என்ற திட்டம், ஆளும்தரப்புக்கு ஒருவித வெள்ளையானையாக மட்டுமே திகழும்.

# பகிடி வதையை தடுக்க திட்டம் கோரும் மனுவை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட அரசகல்வி நிறுவனங்களில் நடைபெறும் பகிடிவதை சம்பவங்களை தடுக்க திட்டமொன்றை வகுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இந்த மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 18ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்தது.

மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ்துரைராஜா, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதற்கமைய வழக்கு தொடர்பான விடயங்களை உறுதிப்படுத்த அன்றைய தினம் இந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ராஜீவ் அமரசூரிய மற்றும் அதன் செயலாளர் சரித் கல்ஹேனா ஆகியோர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுவில் சப்ரகமுவ பல்கலைக்கழகம் அதன் உப வேந்தர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் உயர் கல்வி அமைச்சகத்தின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொறுப்பதிகாரி, சட்ட மா அதிபர் உள்ளிட்ட 69 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

முன்னதாக பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட அரச கல்வி நிறுவனங்களில் நடைபெறும் பகிடிவதை சம்பவங்களை தடுக்க திட்டத்தை வகுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்திருந்தது.

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவரான சரித் தில்ஷான் தயானந்தா கொடூரமாக பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பிரதிபலனாக தற்கொலை செய்துகொண்டுள்ளமை ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும் இந்த விவகாரம் குறித்து விரிவான விசாரணை நடத்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஜிஜி. அருள் பிரகாசம் மூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவரான சரித் தில்ஷான் தயானந்த என்ற இளைஞர் கடுமையாக தாக்கப்பட்டு இறந்த சம்பவத்தை கருத்தில் கொண்டு இந்த பொது நல வழக்கை தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு கல்வி நிறுவனங்களில் பகிடிவதையை ஒழிக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக மனுவில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் காரணமாக பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட அரச கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம் உள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு பகிடிவதையால் இறந்த மாணவரின் மரணம் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உச்ச நீதிமன்றத்தை கோரியுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை ஒழிக்க தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அமல்படுத்த பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு உத்தரவிட வேண்டும் எனவும் 1998ஆம் ஆண்டு 20ஆம் இலக்க பகிடிவதை தடுப்புச் சட்டத்தின் கீழ் இதுபோன்ற குற்றங்களைச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

மேலும் பகிடிவதையால் மாணவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க வழிகாட்டல் தொகுப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்றும் பகிடிவதையால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பளிக்கும் வகையில் உத்தரவொன்றினை பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

# பிள்ளையானின் மனு மீது ஜூன் 23இல் விசாரணை

தன்னை கைது செய்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களம் எடுத்த நடவடிக்கை ஊடாக தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்கிற சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமைமீறல் மனுவை ஜூன் 23 விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான துரைராஜா, மேனகா விஜயசுந்தர மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவர் அடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் தோன்றிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் மன்றில் விடயங்களை முன்வைத்து இந்த மனு தொடர்பான முதற்கட்ட ஆட்சேபணைகளை தாக்கல் செய்ய இரு வார கால அவகாசம் கோரினார். அதற்குப் பிரதிவாதி தரப்புக்கு அனுமதி வழங்கிய நீதியரசர்கள் குழாம் மேலும் இது தொடர்பில் மனுதாரர் சார்பில் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அவற்றையும் ஒரு வார காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்தது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட விசாரணை பிரிவு சிறப்புப் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன, குற்றப் புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் இமேஷா முத்துமால, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சர் அநுர குமார திஸாநாயக்க மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

## முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்











4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தலுக்கு மாறாக நடுநிலை வகித்த காரணத்தால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்படுகிறீர்கள், இது தொடர்பில் விளக்கம் இருந்தால் ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படவேண்டும் இல்லையெனில் கட்சி உறுப்புரிமையில் இருந்தும்சபைஉறுப்பினர்பதவியில்இருந்தும் உடனடியாக நீக்கப்படுவீர்கள் என்றும் நேற்று உடனடியாகவே இராசேந்திரத்திற்கு அனுப்பப்பட்டகடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சித்திரவதைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவல் நிலையத்தில் சரணடைந்தார், பின்னர் அப்போதைய குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் மற்றொரு அதிகாரியால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

மதுஷனுக்குகைவிலங்குபோடப்பட்டு, ஒரு அறைக்குள் இழுத்துச் செல்லப்பட்டு, அவரது பிறப்புறுப்புகளை குறிவைத்து கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டது, இதனால் அவர் சுயநினைவை இழக்க நேரிட்டதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. ரூ. 300,000 லஞ்சம் கொடுத்த பின்னர் அவர் பொலிஸ் பிணையில்விடுவிக்கப்பட்டார்,தடுப்புக்காவலில் இருந்தபோது தாக்கப்பட்ட காயங்களுக்காக 12 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இந்தவழக்குநீதிபதிகள்ஷிரான்குணரத்ன, துரைராஜா மற்றும் நவாஸ் ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்பாக விசாரிக்கப்பட்டு வந்தது. இளைஞர் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்தவோ அல்லது குற்றச்சாட்டுகளை மறுக்கவோ காவல்துறை தவறிவிட்டதாக நீதிபதிகள் கூறினார். மதுஷன் கடுமையான சித்திரவதைக்கு ஆளானதாக மருத்துவ அறிக்கைகள் உறுதிப்படுத்தின என்றும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இந்தக் குற்றங்களுக்காக அப்போதைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹரித் மற்றும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி ஹிரான் என அடையாளம் காணப்பட்ட இரண்டு அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்ப்பின் நகல்களை தேசிய போலீஸ் ஆணையத்திற்கு அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## கெஹலியவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது.

ரம்புக்வெல்ல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் தங்கள் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக வாக்குமூலம் வழங்க லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு வந்திருந்தபோது கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

கொழும்பு நீதவான் தனுஜா லக்மாலி அவர்களைரூ. 50,000ரொக்கப்பிணையிலும் ரூ. 05 மில்லியன் மதிப்புள்ள 9 சரீரப் பிணையிலும் விடுவிக்க உத்தரவிட்டார்.

இருப்பினும், பிணை நிபந்தனைகளை நேற்றுமாலைக்குள்நிறைவேற்றத்தவறியதால், கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டனர்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2025இல் வெளியிடப்பெற்றது